40 கிலோ மீட்டர் என்பதைச் சுருக்கி, குறைவாக்கி, 30 கிலோ மீட்டருக்கு ஒரு பணிமனை அமைக்கலாமா என்கிற கருத்துருவைத் துறையிலே பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதை இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்காக துறை முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அதேநேரத்தில், போக்குவரத்துக் கழகங்கள் செலவு செய்யக்கூடிய நிலையில் இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திசையன்விளைக்கு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்றால், ஒரு பணிமனைக்கு 40 இலட்சம் ரூபாய் செலவாகிறது, நீங்கள் ஒரு பாதித் தொகையைத் தந்தால், மீதித் தொகையைத் துறையே ஏற்றுக்கொண்டு, எங்கெங்கெல்லாம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறீர்களோ தகுதி இருக்குமானால், அந்த இடத்தில் பணிமனை ஆரம்பிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

கால்நடை மருத்துவமனை

***87244—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், சேரகுளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேரகுளத்தில் தற்போது கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியில் உள்ள கருங்குளம் ஒன்றியத்தில், தெற்குக்காரசேரி, வல்லகுளம், சேரகுளம், இராமானுஜம்புதூர் ஆகிய 4 கிராம ஊராட்சிகள் உள்ளன. இங்குள்ள கால்நடைகள், கறவை மாடுகள் 5 ஆயிரமும், செம்மறி மற்றும் வெள்ளாடுகள் 30 ஆயிரமும், கோழியினங்கள் 50 ஆயிரமும் மற்றும் வளர்ப்புப் பிராணிகளாகிய நாய், பூனைகளும் அதிகமாக உள்ளன. இந்த 4 கிராம ஊராட்சிகளிலும் 4 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலமாக தினமும் 2,000 லிட்டர் பால் ஆவினுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், தனியார் பால் உற்பத்தியாளர்கள் மூலமாக 1,500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, மேற்கூறிய 4 கிராம ஊராட்சிகளில் உள்ள கால்நடைகள், மருத்துவ சிகிச்சைக்காக 13 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கருங்குளத்திற்குச் செல்லவேண்டியிருக்கிறது. கிளை மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்றாலும், கால்வாய், பேய்குளம் போன்ற இடங்கள் 10 கிலோ மீட்டருக்கு அதிகமான தூரத்தில் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேரகுளத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, அந்தந்தப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, அப்பகுதிகளில் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்து வருகிறது. ஒரு கிராமத்தில் உள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000—க்கும் மேற்பட்டு இருக்குமானால், அங்கு ஒரு கிளை நிலையமும், 10,000—க்கும் மேல் இருக்குமானால் மருந்தகமும் அமைக்கப்படுகிறது. மேலும், இருக்கின்ற கால்நடை மருத்துவமனைகளுக்கு இடையே உள்ள தூரத்தையும் ஒரு அலகாக

TRUTH ALONE TRIUMPHS

வைத்துக் கணக்கிடுகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கெனவே 3 கால்நடை மருந்தகங்களும், 4 கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. சேரகுளம் கிராமத்தில் கால்நடை எண்ணிக்கை உறுப்பினர் சொல்கின்ற அளவு இருக்குமேயானால், முன்னுரிமை அடிப்படையில் அரசு கால்நடை கிளை நிலையத்தினை அமைப்பதற்கு எதிர்காலத்திலே முயற்சிகளை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் சாத்தான்குளம் தொகுதி, தொழில் வளத்தில் பின்தங்கிய பகுதி, விவசாயத் தொழிலையே நம்பியிருக்கிறது. இங்குள்ள மக்கள் கால்நடைகளை வளர்த்து பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து எங்கள் இராமானுஜம்புதூருக்கு ஒரு கிளை மருத்துவமனை அமைத்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆழ்வார்திருநகரி ஒன்றியத்திலுள்ள மேலவெள்ளமடத்தில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு மருத்துவமனை கட்டப்பட்டு, மருத்துவர்கள் இல்லாத நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் ஒரு மருத்துவரை நியமனம் செய்து தருவார்களா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 4 ஆம் தேதி நடைபெற இருக்கின்ற எனது மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், துணை முதலமைச்சர் அவர்களிடமும் புதிதாக மருத்துவமனைகளை அமைப்பதற்கான அனுமதியைக் கேட்டிருக்கின்றோம். அனுமதி வரப்பெற்றவுடன், தங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

2010 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எனது காவேரிப்பட்டினம் தொகுதி, 70 சதவிகிதம் விவசாயிகள் நிறைந்த தொகுதியாகும். கால்நடைகள் அதிக அளவில் வளர்க்கப்படக்கூடிய ஒரு பகுதியாகும். கால்நடைகளின் கணக்கெடுப்பைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டிலே அதிகமாகக் கால்நடைகள் வளர்க்கக்கூடிய ஒரு பகுதி. ஆனால், எங்களுடைய தொகுதியில் அதிகமாக கால்நடை மருத்துவமனைகள் அமைக்கப்படவில்லை. மேலும், மலைப்பகுதியாக இருப்பதால், அங்கிருந்து காவேரிப்பட்டினத்திற்குக் கால்நடைகளைக் கொண்டு வருவது மிகவும் கடினமாக உள்ளது. ஆற்றுப் பகுதியாகவும், மேடுகள் நிறைந்த பகுதியாகவும் இருப்பதால், கறவை மாடுகளையும், ஆடுகளையும் மருத்துவமனைக்குக் கொண்டுவந்து சிகிச்சைபெற முடியாத நிலை உள்ளது. எனவே, என்னுடைய தொகுதியில் கொத்தளம் என்ற பகுதியிலும் பாரூர், நெடுங்கல் போன்ற பகுதிகளில் கால்நடை மருத்துவமனைகளை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல, புதிதாகக் கால்நடை கிளை நிலையங்களைத் தொடங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும் கோரிக்கைகளை வைத்திருக்கின்றோம். நிதிநிலையை அனுசரித்து நிதியைப் பெற்றதற்குப் பின்னாலே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை முன்னுரிமை அடிப்படையிலே வைத்து, இந்த அரசு நிறைவேற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.